25.02.2025

O.S.No.253/2022

பி.வா.சா.1.திரு.வருண் த.பெ. ராஜேந்திரன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

தாவா சொத்தில் பிரிவினை இல்லாத 1/3 பாகம் உள்ளது என கூறி எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிற சொத்துகளை பொறுத்து எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.80/2011 வழக்கில் என்ன தீர்ப்பு சொல்லப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி அந்த வழக்கை வாபஸ் பெற்றுவிட்டார். இந்த வழக்கின் வாதிகள் மற்றும் 1 ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து ஏற்கனவே தாவா சொத்து உட்பட இதர குடும்ப சொத்துகளையும் சேர்த்து பாகம் பிரித்து கொண்டு அவர் அவர் பாகத்தில் அனுபவத்தில் இருந்து வருவதாக இந்த வழக்கின் வாதிகள் அசல் வழக்கு எண்.80/2011 வழக்கில் பிரதிவாதிகளாக இருந்து எதிருரை தாக்கல் செய்ததால் அந்த உண்மை நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதால் அந்த வழக்கை இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதி வாபஸ் பெற்றுவிட்டார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. 03.03.1965 தேதியிட்ட வா.சா.ஆ 1 பாகபிரிவினை ஆவணத்தில் உள்ள கையெழுத்து 1 ம் பிரதிவாதி கையெழுத்து அல்ல என அசல் வழக்கு எண்.80/2011 வழக்கில் அந்த வழக்கின் வாதியும் இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதியுமான ஜெகதீஸ்வரி தெரிவித்ததன் பேரில் அந்த கையெழுத்து கொண்ட ஆவணத்தை நீதிமன்ற உத்தரவின் படி கையெழுத்து நிபுணருக்கு அனுப்பப்பட்டு அதில் உள்ள கையெழுத்து 1 ம் பிரதிவாதி கையெழுத்துதான் என நிபுணர் அறிக்கை தாக்கல் செய்த பின்பு அதை தெரிந்து கொண்டு வழக்கை வாபஸ் பெற்று கொண்டார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் கேவியட் மனு சார்பு நகல் என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனு என்றால் சரிதான். அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ **17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கேவியட் மனுவை அசோகன் என்ற வழக்கறிஞர் எனக்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.80/2011 வழக்கில் மேற்படி வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை என தாக்கல் செய்த வா.சா.ஆ 7 ல் அசோகன் என்ற வழக்கறிஞர் தான் கையெப்பமிட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் வா.சா.ஆ 7 ஐ பார்த்து சரிதான் என சாட்சி கூறுகிறார். தாவா சொத்தை பொறுத்து தற்போது வரை 1 ம் வாதி தகப்பனார் முருகேசன் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து கருணாமூர்த்தி என்பவர் 1 ம் பிரதிவாதியுடன் ஏற்கனவே கிரைய ஒப்பந்தம் போட்டுகொண்டார் என்று எனக்கு தெரியும் என்றால் வில்லங்கம் பார்த்தபின்பு எனக்கு தெரியவந்தது. கருணாமூர்த்தியுடன் போடப்பட்ட ஒப்பந்தத்தில் கூட்டுப்பட்டாவின் அடிப்படையில் 1 ம் பிரதிவாதிக்கு பாக உரிமை இருப்பதாக சொல்லிதான் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது.

3. தாவா சொத்தை பொறுத்து மதுரை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் 1 ம் வாதியின் செல்வாக்கை பொறுத்து உத்தரவு பிறப்பித்தார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 தான் அந்த உத்தரவு என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து 1 ம் பிரதிவாதி பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டதை ரத்து செய்ய கோரி 1 ம் வாதி தாக்கல் செய்த பட்டா மேல்முறையீடு தாக்கல் செய்ததன் அடிப்படையில் வா.சா.ஆ 3 பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் 1 ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண்.80/2011 வழக்கை மறைத்து பட்டா பெற்றுள்ளார் என சொல்லப்பட்டுள்ளது என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை. வா.சா.ஆ 3 உத்தரவில் தாவா சர்வே எண்ணையும் கட்டுபடுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.80/2011 வழக்கு நிலுவையில் இருந்தபோது கருணாமூர்த்தியுடன் 1 ம் பிரதிவாதி ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தம் தவறு என வா.சா.ஆ 3 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது.

4. அசல் வழக்கு எண்.80/2011 வழக்கு நிலுவையில் இருக்கும் போதே 1 ம் பிரதிவாதி மேற்படி வழக்கை மறைத்து அவர் பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து பட்டா பெற்றதது தவறு எனவும், அந்த பட்டாவை ரத்து செய்து மீண்டும் 1 ம் பிரதிவாதி மற்றும் 1 ம் வாதியின் தகப்பனார் பெயருக்கு பட்டாவை பழைய நிலைக்கு நிலை நிறுத்தி வருவாய் கோட்டாட்சியர் வா.சா.ஆ 3 உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 3 ல் அசல் வழக்கு எண்.80/2011 வழக்கில் பிறப்பிக்கவிருக்கும் தீர்ப்பின் அடிப்படையில் 1 ம் பிரதிவாதி பட்டா மாற்றம் செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அந்த உத்தரவில் தாவா சொத்து அடங்கவில்லை எனவும், இதர சொத்துகளை பொறுத்துதான் பாகபிரிவினை கேட்டுள்ளதாகவும் என்னிடம் கூறினார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 5 ஆவணம் 1 ம் பிரதிவாதி அவரது பாகத்தை பொறுத்து எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் வழக்கிடை சொத்துக்கான மூல ஆவணங்கள் காணாமல் போய்விட்டதாக அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. 1 ம் பிரதிவாதி மேற்படி வழக்கிடை சொத்திற்கான மூல ஆவணங்கள் தொலைந்துபோய்விட்டதாக மக்கள் குரல் பத்திரிக்கையில் 22.04.2021 தேதியில் விளம்பரம் கொடுத்தாக எனது கிரைய ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.04.2021 தேதியில் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் அது சம்மந்தமாக கணினி வழி புகார் செய்யப்பட்டதாக ஆவணத்தை எனது கிரைய ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மூல ஆவணங்கள் தொலைந்துபோனதற்கான புகாரின் அடிப்படையில் காவல் துறையினரால் Non Traceable சான்றிதழ் வழங்கப்பட்டதாக எனது கிரைய ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**(**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது**)**